**களனி ஆற்றிற்கு மேல் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் - 2014**

களனி ஆற்றிற்கு மேல் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தின் 2014 யூலை 01 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2014 மார்ச் 28 ஆந்திகதிய எஸ்எல் --பி III ஆமஇலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, அப்போதைய துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. உயர்ந்த போக்குவரத்து நடமாட்டத்தால் களணி ஆற்றுக்கு குறுக்கே புதிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதன் மூலம் சிதறியிருந்த போக்குவரத்து நெரிசலின் திணிவை சிதறச் செய்தல் மற்றும் குறைத்தல் மூலம் கொழும்பு நகரத்தில் போக்குவரத்து வலையமைப்பை முன்னேற்றுதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல் என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 26,230 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 35,020 மில்லியனானதுடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகள் 2014 யூலை 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 யூலை 01 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில்

எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(உ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

செயற்திட்டத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலுள்ள நடைமுறைக் கணக்கிலுள்ள ரூபா 16,593,299 தொகையான மீதி செயற்திட்டத்திலுள்ள வீதி அதிகார சபையின் நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 15,633,480 தொகையான மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|
| | ஜப்பான்.யென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஜேஐசீஏ | 35,020 | 26,230 | - | - |
| இலங்கை அரசாங்கம் | - | 8,558 | 1.6 | 1.6 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை கடன் | - | - | - | 116.0 |
| | **35,020** | **34,788** | **1.6** | **117.6** |

வெளிநாட்டு கூறின் கீழான ரூபா 100 மில்லியன் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 359 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில், பொது திறைசேரியால் இன்னொரு செயற்திட்டத்திற்காக ரூபா 357.4 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது உள்ளூர் வங்கியொன்றிலிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடன் பெறுகைகளை பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ரூபா 116 மில்லியன் செலவழித்திருந்தது.

## 3.2. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் குறித்த காலத்திற்குள் சிக்கனமான மற்றும் வினைத்திறனான வழியில் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைதலை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு காலத்திற்காக செயற்திட்டத்தின் தொடக்கத்தில் முழுச் செயற்திட்ட காலத்திற்காகவும் ஒட்டுமொத்த செயற்திட்ட திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், உரிய அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளின் நடவடிக்கைகளின் பொறுப்பு என்பன ஒட்டுமொத்த செயல்நடவடிக்கை திட்டத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு காலத்தின் போது செயற்திட்டத்தின் நடவடிக்கைளைக் கண்காணிப்பதற்கு விரிவான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமல் நிர்மாண வேலைகள் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மீள்குடியேற்ற நோக்கத்திற்காக சலமுல்ல வீடமைப்பு வளாகத்தில் 360 வீடுகள் கொள்வனவு செய்வதற்கு முற்பணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 100 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.

(இ) பாலங்களின் நிர்மாண வேலைகளால் பாதிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான 03 கட்டிடங்களின் வடிவமைப்பிற்கான மற்றும் புனர்நிர்மாணத்திற்கான ஆலோசனை சேவைகள் ரூபா 42.49 மில்லியன் கிரயத்தில் உள்ளூர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 01 கட்டிடத்திற்கான ஆலோசனை சேவைகள் மீளப்பெறப்பட்டிருந்தது பின்னர் அதன் மீதி ஆரம்பத்தில் உடன்பட்ட கிரயத்தில் 10 சதவீதம் குறைக்கப்பட்டது. 03 கட்டிடத்திற்காக ஆலோசனை சேவைகள் ஆரம்ப கட்டத்தில் தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்டிருக்காததுடன் இதன் விளைவாக வேலையின் நோக்கெல்லையின் தொடர்ந்து வரும் திருத்தங்களிற்கான குறித்த தொகை குறைக்கப்பட முடியவில்லை.

## 3.3. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பாலத்தின் வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவைகளிற்கான அக்கறை வெளிப்பாடு 2014 பெப்ரவரி 07 இல் சர்வதேச ரீதியாக கோரப்பட்டதுடன் அவற்றில் 05 கேள்வியாளர்கள் பதிலளித்திருந்தனர். எவ்வாறாயினும், 04 கேள்வியாளர்கள் அவர்களுடைய நிதி மற்றும் தொழில்நுட்ப பிரேரணைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. பின்னர், தனியொரு கேள்வியாளருடன் கொண்டு நடாத்துவதற்கு செயற்திட்டம் அனுமதித்திருந்தது.

## 3.4. மனித வள முகாமைத்துவம்

2014 சனவரி 29 ஆந் திகதிய கடிதம் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 18 பதவிகளிற்காக 33 நபர்களை அனுமதித்திருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பதவியணி 33 உத்தியோகத்தர்களை கொண்டுள்ளது. எவ்வாறாயினும், 02 பிரதான பொறியியலாளர்கள், 06 வேலைத்தள பொறியியலாளர்கள்/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் 01 உதவி காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பதவி என்பன வெற்றிடமாக இருந்தது.